# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஆகஸ்டு 23, 2025

Weekly E-paper • August 23, 2025



## நல்ல மாநாடு! நல்ல முழக்கங்கள் !

சுப.வீரபாண்டியன்

### சி.பி.ராதாகிருஷ்ணன்? மேனாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி?

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

### கருப்புச் சட்டம், அது!

தலையங்கம்

### பாதிரிமார்களின் தமிழ்ப்பணி!

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஆகஸ்டு 23, 2025 Weekly E-paper ● August 23, 2025


# நல்ல மாநாடு! நல்ல முழக்கங்கள் !

சுப.வீரபாண்டியன்

மாநாடு தொடங்குவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே, கட்சியின் தொண்டர்கள்சாரைசாரையாகமாநாட்டுத்திடல்நோக்கிவந்தார்கள். அதே வேகத்தில் கட்சியின் தலைவர் பேசத் தொடங்கும் முன்பே, சாரை சாரையாகத் தொண்டர்கள் வெளியேறினார்கள்.

இதுதான் மதுரையில் நடைபெற்ற த.வெ.க மாநாட்டின் கதைச் சுருக்கம்!

கட்சியின் தலைவர் விஜய், கொஞ்சம் முன்னேறி இருக்கிறார்! பாசிசம் – பாயாசம் என்னும் அடுக்குத் தொடரிலிருந்து பாசிசம் – பாய்சன் என்னும் இடத்திற்கு வந்து சேர்ந்துள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, அங்கிள், அங்கிள் என்று கூட்டம் முழுவதும் குறிப்பிட்டார்! (ஒரு கட்சியின் தலைவர், தங்கள் கட்சியின் அரசியல் மாநாட்டில் பேசும் போது பின்பற்ற வேண்டிய நாகரிகம் இதுதான் போலிருக்கிறது) ஆனால்



மோடியைப் பற்றிக் குறிப்பிடும்போது மட்டும், மிஸ்டர் பிரைம் மினிஸ்டர் என்றும், மோடிஜி என்றும் அழைத்தார்!

அரசியலிலும், திரையுலகிலும் தனக்குப் பிடித்தவர் எம்ஜிஆர் என்றார் ! அண்ணன் கேப்டன் விஜயகாந்த் என்று சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டார்! ( ஏதேனும் பேசி, அந்த வாக்குகளைப் பெற்று விட முயற்சி செய்யும் பரிதாபம்)

2026 தேர்தலில் த.வெ.க.விற்கும், திமுகவிற்கும் தான் நேரடிப் போட்டி என்று அறிவித்தார்! மாநாட்டில் கலந்து கொண்ட தொண்டர்கள் பலருக்கும் தமிழ் தெரியாதோ என்னவோ, இடையிடையே ஆங்கிலத்தில் பேசி விளக்கினார்.

தான் பேசத் தொடங்கும் போதே, ஒரு பெரிய உண்மையை மாநாட்டில் போட்டு உடைத்தார்! வேட்டையாடுவதற்கு மட்டும்தான் சிங்கம் வெளியில் வருமாம்...... வேடிக்கை பார்ப்பதற்கு எல்லாம் வராதாம்!எதிரில் அமர்ந்திருந்தசிங்கக்குட்டிகளையும்,சிங்கப்பெண்களையும்வேட்டையாடச் சிங்கம் இப்போது வெளியில் வந்திருக்கிறது போலிருக்கிறது!

ஊழலைப் பற்றி எல்லாம் உரத்துப் பேசிய நடிகர் விஜய், ஒரு முறை கூட, மறந்தும் கருப்புப் பணம் பற்றி எதுவும் பேசவில்லை!

கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், ஒலிபெருக்கியில் திரும்பத் திரும்பச் சில முழக்கங்களை எழுப்பிக் கொண்டே இருந்தார்! அந்த முழக்கங்கள் இவைதான் –

"ஏறாதீர், ஏறாதீர், மின்கம்பங்களில் ஏறாதீர்!

"கிழிக்காதீர், கிழிக்காதீர், தரை விரிப்புகளைக் கிழிக்காதீர்"

நல்ல மாநாடு! நல்ல முழக்கங்கள்!! ●




குடியரசுதுணைத்தலைவர்

# சி.பி.ராதாகிருஷ்ணன்? மேனாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி?

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

குடியரசு துணைத் தலைவராக இருந்த ஜெகதீப் தன்கர் 21.07.2025 அன்று பதவிவிலகியதைத்தொடர்ந்து இந்தப்பதவிக்கு 09.09.2025 அன்று தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஆளும் பா.ஜ.க கூட்டணியின் வேட்பாளராக தற்போதைய மராட்டிய ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களும், இந்தியா கூட்டணியின் வேட்பாளராக உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி பி. சுதர்சன் ரெட்டி அவர்களும் அறிவிக்கப்பட்டுள்ளனர். பா.ஜ.கவின் வேட்பாளராக சிபி இராதாகிருஷ்ணன் அவர்கள் நிறுத்தப்பட்டுள்ளது திமுகவிற்கு தரப்பட்டுள்ள நெருக்கடியாக பார்க்கப்படுகிறது. தமிழரான சி. பி. இராதாகிருஷ்ணனுக்கு திமுக ஆதரவளிக்கவில்லை என்று பரப்புரை செய்வதன் மூலம் திமுக தமிழர்களுக்கு எதிரான கட்சி என்று நிறுவ பாஜக முயல்கிறது. மேலோட்டமாக இவ்வாறு பார்க்கப்பட்டாலும் இதற்கு பின்னால் பாஜகவின் மிகப்பெரிய சதி திட்டம் ஒன்று இருக்கிறது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களில் அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி பெரும்பான்மையான இடங்களை கைப்பற்றியது. ஆனால் தேர்தலுக்குப் பிந்தைய திராவிட மாடல் அரசின் செயல்பாடுகளின் காரணமாகவும், அப்பகுதியின் தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட மேனாள் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களின் தீவிர களப்பணியின் காரணமாகவும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் 2024 நாடாளுமன்றத் தேர்தல்களில் மேற்கு மாவட்டங்களை தி.மு.க முழுமையாக கைப்பற்றி தனது பலத்தை நிரூபித்துள்ளது. இந்த சூழலில் அங்கே பெரும்பான்மையாக வாழும் சமூகத்தைச் சேர்ந்த சி.பி. ஆர் அவர்களை வேட்பாளராக நிறுத்தி, அவருக்கு தி.மு.க ஆதரவளிக்காத பட்சத்தில் அக்கட்சியை அந்த சமூகத்தினருக்கு எதிரான கட்சி என்று பரப்புவதன் மூலம் எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மேற்கு மாவட்டங்களில் தி.மு.கவை தோற்கடித்து விடலாம் என்று பா.ஜ.க கணக்கு போட்டு சி.பி. ஆர் அவர்களை வேட்பாளராக நிறுத்தியுள்ளது. ஒருபோதும் கள அரசியலில் ஈடுபடாத நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் போன்றவர்களுக்கு ஒன்றிய




அரசின் அதிகாரமிக்க அமைச்சர் பொறுப்புகளைக் கொடுத்து விட்டு எவ்வித அதிகாரமும் இல்லாத குடியரசு துணைத் தலைவர் பொறுப்புக்கு சி.பி.ஆர் அவர்களை நிறுத்தும் பா.ஜ.கவின் சூழ்ச்சி அம்மக்கள் நன்கு உணர்ந்து இருக்கின்றனர்.

.உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு பிறகும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மறுத்தது, கீழடி அகழாய்வு அறிக்கையை ஏற்க மறுத்தது, தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித்துறைக்கு அளிக்க வேண்டிய நிதியை விடுவிக்க மறுத்தது, நீட் தேர்வு விலக்கு போன்ற தமிழர்களின் வாழ்வாதார பிரச்சனைகள் எவற்றிலும் தமிழ்நாட்டிற்கு ஆதரவாக குரல் கொடுக்காத சி.பி. ஆர் அவர்களை தமிழர் என்ற காரணத்திற்காக மட்டும் எவ்வாறு ஆதரிக்க முடியும் என்பதே தி.மு.கவின் கேள்வி.

“இது திருவள்ளுவர், பாரதி, பெரியார், கலைஞர் ஆகியோரின் மண். எப்போதும் போராடி வருகிற பாரம்பரியம் நிறைந்த இந்த மண்ணில் நான் இப்போது இருக்கிறேன். போராட்ட குணத்தை இந்த மண்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## கருப்புச் சட்டம், அது!

ஒரு சட்டமுன்வடிவை அவையின்முன் வைக்கும்போது அதுகுறித்துப் படித்துப் பார்க்கவும், பேசவும், விவாதிக்கவும் கால அவகாசம் கொடுக்கும் வகையில் நாடாளுமன்றத் தில் ஆளுங்கட்சி செயல்பட வேண்டும், அதுதான் நேர்மையான செயல்.

மழைக்காலக் கூட்டத் தொடர் முடியும் இறுதி நாளில் 130ஆவது திருத்தச் சட்ட முன்வடிவை அவையில் வைத்து, அதைப் படிக்கக்கூட நேரமில்லாமல் செய்யும் நேர்மையற்ற செயலை நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கண்டித்திருக்கிறார். அது என்ன சட்டத்திருத்தம்?

முதலமைச்சரோ, பிறஅமைச்சர்களோ கைது செய்யப்பட்டு 30 நாட்கள் சிறையில் இருந்தால் போதும், அவர்கள் பதவி பறிக்கப்படும். இதுதான் அந்தத் திருத்தச் சட்டம்.

அதாவது ஒருவரை அமலாக்கத்துறை மூலம் கைது செய்தால் அவர் குற்றவாளியா, இல்லையா என்று நீதிமன்றம் உறுதி செய்துதான் தண்டனை கொடுக்கும். அது 30 நாள்களில் நடந்துவிடாது.

கைது செய்தவரைப் பிணையில் எடுப்பதற்கே சிலவேளை ஏறத்தாழ 30 நாள்கள் ஆகிவிடும். அதற்குள் பதவி பறிக்கப் படுமானால், அது சம்பந்தப்பட்ட அமைச்சரை வாக்களித்துத் தேர்ந்தெடுந்தத் தொகுதி மக்களை அவமானப் படுத்துவதாக அல்லவா இருக்கும்?

ஆர்எஸ்எஸ் காவிக் கும்பலுக்குப் பிடிக்காத எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இச்சட்டம் வலிந்து திணிக்கப்படும் அபாயமும், ஆபத்தும் இதில் இருக்கிறது. இது மக்களுக்கான சட்டமன்று. காவி மகாராஜாக்களுக்கான சர்வாதிகாரச் சட்டம்.

உறுப்பினர்களை விலைக்கு வாங்கி ஆட்சியைக் கலைப்பது, கலவரம், ரதயாத்திரை, புறக்கடை வழியாக நுழைந்து ஆட்சியைக் கலைக்க முடியாத தமிழ்நாடு, கேரளம், மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் இத்திருத்தச் சட்டம் தலைவிரித்து ஆடுவதற்கும் வாய்ப்பு இல்லாமல் இல்லை.

தமிழ்நாடு முதலமைச்சர் சொல்வது போல இதுவொரு கருப்புச் சட்டம். இச்சட்டம் இப்போது ஆய்வுக்குழுவுக்கு அனுப்பியிருந்தாலும், நாளை அது நடைமுறைக்கு வந்துவிடக் கூடாது. அந்தத் திருத்தச் சட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெறவேண்டும். அல்லது எதிர்கட்சிகளின் போராட்டம், அதைச் செய்யவைக்க வேண்டும்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

*எப்போதும் விடுவதில்லை" என்று தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போது உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி பி.சுதர்சன் ரெட்டி குறிப்பிட்டுள்ளார்.*

*"தமிழ்நாடு ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டது. எந்த தமிழனும் தமிழ்நாட்டை உருவாக்கவில்லை" என்று மும்பையில் நடைபெற்ற ஹெட்கேவர் பற்றிய நூல் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரையில் சி.பி.ஆர் குறிப்பிட்டுள்ளார்.*

*மேற்கண்ட இரண்டு சொற்பொழிவுகளின் மூலம் தமிழ்நாடு குறித்த இரண்டு குடியரசுத் தலைவர் வேட்பாளர்களின் பார்வையை நாம் அறிந்து கொள்ள முடியும். சிலப்பதிகாரம், தொல்காப்பியம் போன்ற சங்க இலக்கியங்களில் தமிழ்நாடு பற்றி விளக்கப்பட்டிருப்பதை மறைத்ததன் மூலம் சி.பி. ஆர் யாருக்கு ஆதரவானவர் என்பதை புரிந்து கொள்ள முடியும். தமிழ்நாட்டின் மேன்மையை உணர்ந்து போற்றும் உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி பி.சுதர்சன் ரெட்டியை தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிப்பது தான் சரியான முடிவாக இருக்க முடியும்.*

*கோவையில் 1998 ஆம் ஆண்டு மதரீதியான வன்முறையை திட்டமிட்டு கட்டவிழ்த்ததன் காரணமாகவே 1998 மற்றும் 1999 மக்களவைத் தேர்தலில் கோவையில் வெற்றி பெற்றவர் சி.பி.ஆர். அது மட்டுமின்றி சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசிய தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைக்கு காவி பயங்கரவாதிகள் விலை வைத்த போது, ஆளுநர் பொறுப்பில் இருந்து கொண்டே அதை ஆதரித்துப் பேசியவர் தான் சி.பி.ஆர். இவ்வாறு மதவாத வெறுப்பு அரசியலின் பிரதிநிதியாகவே சி.பி.ஆர் களத்தில் நிற்கிறார்.*

*தங்களிடம் சொல்லாமல் ஒரு தீர்மானத்தை விவாதத்திற்கு அனுமதி அளித்து விட்டார் என்பதற்காகவே முந்தைய குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் அவர்களை மிரட்டி பதவி விலக வைத்ததுடன் தற்போது அவர் எங்கு இருக்கிறார் என்ற தகவல் கூட தெரியாத நிலை நிலவும் இந்த சூழலில், மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் வேட்பாளர் உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி பி.சுதர்சன் ரெட்டி வெற்றி பெற்றால் மட்டுமே இந்திய அரசியலமைப்பு சட்டத்தையும், இந்தியாவின் பன்முகத் தன்மையையும் காப்பாற்ற இயலும்.*

# பாதிரிமார்களின் தமிழ்ப்பணி!

## முரசொலி மாறன்

இந்தியாவின் வரலாற்றையும், கலாச்சாரப் பெருமையையும் கண்டறிய எவ்விதம் ஐரோப்பியர் உதவினரோ, அதுபோலவே, திராவிடக் கலாச்சார மேம்பாட்டை எடுத்து வைக்கவும் அவர்களே பெரிதும் உதவினர்.

குறிப்பாக கிருத்துவ பாதிரியார்கள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து தமிழ்நாடு வந்தபோது, அவரவர்கள் தாய்மொழியில் மதத்தைப் போதிக்க வேண்டும் என்கிற குறிக்கோள் காரணமாகத் தமிழ் மொழியிலும், கலாச்சாரத்திலும் காட்டிய ஆர்வம் கலாச்சார மறுமலர்ச்சிக்கு ஏற்றதொரு ஆதாரச் சூழ்நிலையை உருவாக்கிற்று.


திருக்குறளின் அறத்துப் பாலையும், பொருட்பாலையும் இலத்தீனில் மொழிபெயர்த்து மேலைநாட்டுக்கு வழங்கினார். ஐந்திலக்கணங்களைக் கூறும் "தொன்னூல்", தமிழ்ப் பேச்சு மொழியைப் பற்றிய "கொடுந்தமிழ் இலக்கணம்" ஆகியவை இவர் இயற்றிய நூல்கள்.

அவர் அன்று உருவாக்கிய அடிப்படைதான் பிற்காலத்தில் சான்றோர் பலர் தமிழ் மொழியிலும், கலாச்சாரத்திலும் தொடர்ந்து ஆய்வு நடத்திடப் பேருதவியாய் இருந்தது.

தமிழில் அதிகம் ஈடுபாடு காட்டிய கிருத்துவப் பாதிரியார் இராபர்ட்-டி-நோபிலி (Robert Di Nobili, 1577 - 1656) ஆவார். திருமலை நாயக்கர் காலத்தில் மதுரைப் பகுதியில் வாழ்ந்த இவர், கிருத்துவ மதப் பிரச்சாரத்திற்காக தமிழில் உரைநடை நூல்களை இயற்றினார். தமிழையும், வடமொழியையும் கற்ற முதல் ஐரோப்பியர் இவரே.





அடுத்துக் குறிப்பிட்டுக் கூறவேண்டியவர், வீரமாமுனிவர் என்று தன்பெயரை மாற்றிக்கொண்ட, மதப்பணியோடு தமிழ்ப்பணியும் ஆற்றிய இத்தாலி நாட்டைச் சேர்ந்த பெஸ்கி (Constantius Beschi, 1680-1743) ஆவார். 1711ஆம் ஆண்டு மே 8ஆம் நாள் மதுரையை வந்தடைந்த இவர் பழனி சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழிலக்கணம், இலக்கியம் கற்றார்.

நொபிலி போல் அல்லாது தான் இயற்றிய நூல்களில் வடமொழியை இவர் அதிகம் கலக்கவில்லை. அக்காலத்தில் எ- ஏ, கெ-கே, கொ-கோ என்று எழுதும் வழக்கமில்லை. எ, ஒ எனும் உயிர் எழுத்துகளையும், இவ்வுயிர் எழுத்துகள் ஏறிய மெய்யெழுத்துகளையும் எழுதி, அவற்றின்மேல் புள்ளி வைத்தால் குறிலாகவும், புள்ளி வைக்காவிட்டால் நெடிலாகவும் கொள்வது வழக்கமாக இருந்தது. இவர்தான் அதை மாற்றி எ-ஏ, கெ-கே, கொ-கோ என்று எழுதும் மரபைப் புகுத்தித் தண்டமிழ் மொழிக்கு அதுவரை யாரும் செய்யாதப் பெருந்தொண்டு செய்து அழியாப் புகழ்பெற்றார்.

அதுமட்டுமின்றி தமிழ் அகராதிகளுக்கெல்லாம் முதல்நூலாக விளங்கும் "சதுரகராதி" இயற்றித் தமிழகராதியின் தந்தை என்ற புகழையும் பெற்றார்.

அயர்லாந்தில் பிறந்த அன்னிபெசன்ட் அம்மையார் எப்படித் தென்னிய நலவுரிமைச் சங்கம் தோன்றுவதற்கான உடனடிக் காரணங்களில் ஒன்றாக இருந்தாரோ, அதுபோலவே அயர்லாந்தில் பிறந்த இராபர்ட் கால்வெல் (Robert Galdwell, 1819-1891) வேறு எந்த ஐரோப்பியரையும் விட திராவிட மறுமலர்ச்சிக்கு ஆதார சுருதியை தனது ஆய்வின் மூலம் உருவாக்கிக் கொடுத்தார்.

1838இல் சென்னை வந்திறங்கி, தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் நடத்தி, தமிழ்மொழியில் மூழ்கி, நமது மொழியிலும், வரலாற்றிலும் நிபுணர் என்கிற பெயரைப் பத்தாண்டுகளில் பெற்றார்.

அவர் 1855 இல் வெளியிட்ட "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" ( A Comparative Grammar of the Dravidian South Indian Family of Languages) எனும் அவரது ஒப்பற்ற ஆய்வு நூல் மொழியியலுக்குத் தரப்பட்ட உயர்ந்த காணிக்கை மட்டுமல்ல, திராவிட மொழிகளுக்குப் புத்துயிரூட்டிய மாமருந்து மட்டுமல்ல, தூங்கிக் கிடந்த திராவிட மக்களுக்கு அளிக்கப்பட்ட கண்திறப்புச் சிகிச்சையாகும்.

அது வெறும் மொழி இயல் ஆராய்ச்சி நூல் மட்டுமல்ல, தமிழ்-திராவிட இனவரலாறும் அதில் கூறப்பட்டிருந்தது.

திராவிட மொழிகளின் தொன்மை, ஆரியர் வருகைக்குப் (அதாவது கி.மு.1600 இக்கும்) பல நூற்றாண்டு கட்கு முன்னென்று தெளியலாம்" என்று அவர்தனது ஆராய்ச்சி முடிவினைக் கூறினார்!

-முரசொலி மாறனின்
திராவிட இயக்க வரலாறு" (பக்கம்: 171-173)